அலகு 1

# மேலாண்மைச் செயல்முறைகள்
# MANAGEMENT PROCESS

1
அத்தியாயம்

# மேலாண்மைத் தத்துவங்கள்
# PRINCIPLES OF MANAGEMENT

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

–குறள் 423

**பொருள் :** எப்பொருளை யார் யார் இடம் கேட்டாலும் (கேட்டவாறே கொள்ளாமல்) அப் பொருளின் மெய்யானப் பொருளைக் காண்பதே அறிவாகும்.

FCXOY

## கற்றல் நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்**

- மேலாண்மையின் அடிப்படைக் கருத்து
- மேலாண்மையின் வரைவிலக்கணம்
- மேலாண்மை கலையா? அறிவியலா?
- மேலாண்மை Vs நிர்வாகம்
- மேலாண்மைச் செயல்முறைகள்
- அறிவியல் பூர்வமான மேலாண்மையின் கோட்பாடுகள்
- மேற்பார்வை வீச்செல்லை

ஆகியவற்றைப் பற்றி புரிந்து கொள்ள இயலும்.

## அத்தியாயம் சுருக்கம்

1.01 மேலாண்மையின் அடிப்படைக் கருத்து
1.02 மேலாண்மையின் வரைவிலக்கணங்கள்
1.03 மேலாண்மை Vs நிர்வாகம்
1.04 மேலாண்மைச் செயல்முறைகள்
1.05 அறிவியல் பூர்வமான மேலாண்மையின் கோட்பாடுகள்
1.06 நவீன மேலாண்மையின் கோட்பாடுகள்
1.07 மேற்பார்வை வீச்செல்லை:

நமது அன்றாட வாழ்க்கையில் மேலாண்மை என்பது மிக, மிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். நடைமுறையில் நமது அனைத்து முயற்சிகளிலும் செயல்பாடுகளிலும் மேலாண்மையின் பங்கு உள்ளது. நாம் விளையாட்டுத் திடலில் இருந்தாலும், நூலகத்தில் இருந்தாலும், வகுப்பறையில் இருந்தாலும், விடுதியில் இருந்தாலும் அல்லது எங்கு இருந்தாலும் நமது பல்வேறு செயல்களை திட்டமிட்டு அவற்றை முறையாக நடைமுறைப்படுத்தி நோக்கங்களை நிறைவேற்றி விரும்பத்தக்க இலக்குகளை எட்டுவதில் மேலாண்மையின் பங்கு அளப்பரியது. எனவே மேலாண்மை என்பது மற்றவர்களின் முயற்சி மற்றும் ஒத்துழைப்புடன் நோக்கங்களை எய்தும் ஒரு கலையாகும். தொழிலமைப்பின் இலக்குகளை வெற்றிகரமாக எய்துவதற்கும், வியாபாரத்தின் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கும் மேலாண்மை செயல்முறைகள் உதவுகின்றது. ஒரு நிறுவனத்தின் வெற்றியை அல்லது ஒரு தனி மனிதனின் வெற்றியை அவர்களின் பணிகளும், கடமைகளும், பொறுப்புகளுமே தீர்மானிக்கிறது. உலகின் எப்பகுதியிலும் நிறுவன அமைப்பின் வாழ்வில் மேலாண்மையே அனைத்தையும் விட மிக முக்கியமானதாகும். இது ஒரு உலகளாவிய கருத்தாகும்.

## 1.01 மேலாண்மையின் அடிப்படைக் கருத்து

மேலாண்மையின் அடிப்படைக் கருத்துக்களை அவற்றின் தொன்றுதொட்ட இயல்புகள் மூலமாக அறிந்து கொள்ள இயலும்.



12th Commerce Tamil Unit 1.indd 1 19/12/2022 14:42:14